(6ம் பக்தித் தொடர்ச்சி)

பவழக்காரத் தெரு)த்திலிருந்து எடுபிடிகளுடனும் தமிழ் மொழி வாழ்க! ஹிந்தி வேண்டாம் என்ற பேரொலி முழக்கத்துடனும் லிங்கச்செட்டி தெரு வழியே ஹைகோர்ட்டுப் பீச் சுக்குப் போனது. அவ்விடத்தில் மாலை 6-மணிக்குக் கூட்டம் துவங்கியது. நாள் முழுதும் மப்பும் மந்தாரமாய் இருந்தது எனினும் அறுநூறு மக்கட்கு மேல் கூட்டத்துக்கு வந்திருந்தனர்.

வந்திருந்தவர்களில் தோழர்கள் டி. எஸ். நடராசபிள்ளை பி. எ. பி எல், மோரூர் கந்தசாமி முதலியார், ரெவரெண்டு அருள்தங்கையா, எ. முத்தையா எம்.எ.நெல்லையப்பர்,எஎன்.சிவஞானமுதலியார், சோமசுந்தரம் பிள்ளை,எஸ். ரெங்கநாதப் முதலியாருமாவர்.தலைவர்தோழர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் எம். எ. எம். எல். குறித்தநேரத்தில் வரவில்லையாதலால் தமிழர் சிர்பர் தோழர் சி. ஆர். கோவிந்தராஜ முதலியாரவர்கள் தலைவராய்த் தேர்ந்தெடுக்கப் பட்டு கூட்டம் நடை பெறலாயிற்று. 6-30 மணிக்குத் தலைவர் தோழர் கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் வந்தமையால் அவர்களே தலைவராயிருந்து கூட்டத்தை நடத்தலானார்கள். தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர் எம். கந்தசாமி முதலியாரவர்கள் தமிழ் நாட்டிற்கு ஹிந்தி வேண்டாமென்றும், தமிழ் நாட்டை தனி மாகாணமாகப் பிரிக்க வேண்டுமென்றும் தமிழ் மக்கள் ஊர்கள் தோறும் தமிழ்ச்சங்கங்கள்நிறுவ வேண்டுமென்று சில தீர்மானங்களை பிரேரேபித்தார்.

பின் ரெவரண்ட் அருள்தங்கையா அவர்களும், எஸ். ரங்கநாதம் அவர்களும் அந்த தீர்மானங்களை ஆதரித்த பின் கூட்டம் கலைந்தது.

---

கூறினார்.

ஹிந்தியைக் கட்டாயபாடமாக்கப் போவதை ஆதரித்துப் பேச விருப்ப முள்ளவர்களுக்கு இந்த மேடையில் பேச இடம் கொடுக்கப்படும், கேள்வி கேட்பவர்கட்கும் இங்கு இடம் கொடுக்கப்படும் என்று அழைத்தார். எவரும் முன்வர வில்லை.

அதன் பிறகு தோழர்கள் கரூர் ஈழத்து சிவானந்தஅடிகள், குளித்தலை தமிழ்ப் பண்டிதர் சுந்திரராஜுலு நாயுடு காரு, பூவாளூர் அ. பொன்னம்பலனார், சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தமிழ்ப்பேராசிரியர்எஸ். சோமசுந்திர பாரதியார் ஆகியவர்கள ஹிந்தியைக் கட்டாய பாடமாக வைக்கப் போவதை பலமாக எதிர்த்து பல மேற் கோள்களுடன் உணர்ச்சி ததும்ப வீரம் ததும்ப விரிவுரையாற்றினார்கள்.

பின்னர் கீழ்கண்ட தீர்மானங்கள் தலைவர் அவர்களால் பிரேரேபிக்கப்பெற்று ஏகமனதாக நிறைவேற்றப் பெற்றன.

தீர்மானங்கள் விபரம் வருமாறு:-

### தீர்மானங்கள்.

(1) தமிழ்நாட்டில் ஹிந்தி மொழியைக் கட்டாய பாடமாக்கச் செய்கின்ற முதன் மந்திரி அவர்களின் எதேச்சதிகாரச் செயலை இப்பொதுக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

(2) தமிழ் மாகாணத்தை தனி மாகாணமாகப் பிரிக்க வேண்டுமென அரசாங்கத்தாரை இப்பொதுக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

(3) தமிழ் நாட்டிலுள்ள தமிழ் அறிஞர்களும், தமிழ்ப் புலவர்களும், தமிழ் மக்களும் தமிழ்ச் சங்கங்களும், பொதுமக்களும் ஹிந்தியை எதிர்த்து, கண்டித்து கிளர்ச்சி செய்து வருவதை அறிந்தும் பொதுஜன அபிப்பிராயத்திற்கு சிறிதும் மதிப்புக் கொடாமல் காங்கிரஸ் தலைவர் முத்துரங்க முதலி

---

சிவ நேசச்செல்வர்களும் பொது மக்களும் பெருந் திரளாக வந்திருந்தார்கள். தலைவர் முன்னுரைக்குப் பிறகு தமிழறிஞர்கள் எஸ். சோமசுந்திர பாரதியார் எம். எ. பி எல். வெங்கடசாமி நாட்டார், டி. வி. உமாமகேஸ்வரம் பிள்ளை பி.எ.பி.எல். பொள்ளாச்சி தேசபக்தர் ராமலிங்கம், நடேச முதலியார் ஆகியவர்கள் ஹிந்தியைக் கட்டாய பாடமாக்குவதைப் பலமாக கண்டித்துப் பேசினார்கள். தோழர் நடேச முதலியார், அவர்கள் ஹிந்தியைக் கட்டாய பாடமாக வைக்கக் கூடாது என்ற அபிப்பிராயத்தில் கடு நிலைமை வகித்தார்.

அதன் பிறகு தலைவர் முடிவுரையிலும் ஹிந்தியைத் தமிழ் நாட்டில் கட்டாய பாடமாக வைக்க அரசியலார் செய்யும் முயற்சியைக் கண்டித்துப் பேசினார். பெரிய புராண விரிவுரையாற்றிவந்த லால்குடி போர்டு ஹைஸ்கூல் தமிழ் பண்டிதர் அ. மு. சரவண முதலியார் அவர்கட்கு தலைவர் அவர்களால் "பெரும் பொருள் விளக்கனார்" என்ற பட்டமளித்து ஒரு தங்கப் பதக்கமும் வழங்கினார், நன்றி கூற இக் கூட்டம் இனிது முடிவு பெற்றது.

---

### சென்னை.

---

#### ஹிந்தி நாள் எதிர்ப்புஊர்வலம்.

—()—

சென்னை, நவ. 8

28—11—37-ல் தமிழ் நாட்டில் ஹிந்தி நாள் கொண்டாட வேண்டுமென்று தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவர் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார். தமிழ் மொழிக்கும் தமிழர் நலத்துக்கும் கேடு பயப்பதற்காகச் செய்யப்படும் இச்சூழ்ச்சியை வன்மையாய்க் கண்டிப்பதற்கு, அன்று மாலை 4-மணிக்குத் தமிழர் ...த் தலைமை நிலைய (147.

(தொடர்ச்சி 3ம் பக்தி பார்க்க)